# EASTERN UNIVERSITY, SRI LANKA
# FACULTY OF COMMERCE AND MANAGEMENT
# (EXTERNAL DEGREE)
# PART – III (4TH YEAR) EXAMINATION IN BBA – 2009/10 (AUGUST 2014)

## EXB 402 – ECONOMIC DEVELOPMENT AND PLANNING

13 OCT 2014

எல்லா வினாக்களுக்கும் விடை தருக. நேரம்:- 03 மணித்தியாலங்கள்

01. a). அபிவிருத்திப் பொருளியலை வரையறுத்துக் கூறி அதன் சிறப்பம்சங்களைப் பட்டியலிடுக. (08 புள்ளிகள்)

b). அபிவிருத்தி என்ற எண்ணக்கரு தொடர்பாக பல்வேறு காலப்பகுதிகளிலும் முன்வைக்கப்பட்ட விளக்கங்களை ஒழுங்கு முறையில் தருக (12 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

02. a). "அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் மக்களின் வாழ்க்கைத்தரம் குறைந்த மட்டத்தில் இருப்பதற்கு அவர்கள் பெறும் குறைந்த வருமான நிலைமையும் ஒரு காரணமாகும்." உதாரணங்கள் தந்து விளக்குக. (04 புள்ளிகள்)

b). குறைவிருத்தி நாடுகளின் உயர்ந்த சனத்தொகை வளர்ச்சி வீதம் பற்றியும் அதன் பாதக விளைவுகள் பற்றியும் உதாரணங்களுடன் விளக்குக. (08 புள்ளிகள்)

c). விருத்தியடைந்து வரும் நாடுகள் தமது கைத்தொழில் கட்டமைப்பு வளர்ச்சி பொறுத்து எவ்வாறு தமக்குள் வேறுபட்டு நிற்கின்றன? உதாரணம் தந்து விளக்குக. (08 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

03. a). "குறை விருத்தி நாடுகளில் பல உயர்ந்த வீத பொருளாதார வளர்ச்சியைப் பெற்றிருப்பினும், அவ் வளர்ச்சியினால் வறியவர்கள் போதியளவு நன்மையைப் பெற முடியவில்லை." காரணங்களைக் கூறி விளக்குக. (04 புள்ளிகள்)

b). கினி குணகம் எவ்வாறு ஒரு பொருளாதாரத்தின் வருமான ஏற்றத்தாழ்வு நிலையை அளவிட்டுக் காட்டுகிறது? (04 புள்ளிகள்)

c). உலகளாவிய சூழல் பாதுகாப்புக்காக விருத்தியடைந்து வரும் நாடுகள் எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்? (12 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

04. a). றொஸ்டோவின் பொருளாதார வளர்ச்சி மாதிரியில் இடம் பெறும் விடுபடுகட்டத்தின் இயல்புகளையும், அக்கட்டத்தின் முக்கியத்துவத்தையும் விளக்குக. (08 புள்ளிகள்)

b). பிழைப்புமட்டத்துறையில் மிகையான ஊழிய நிரம்பலைக் கொண்ட குறை விருத்தி நாடுகளின் அபிவிருத்தி பற்றிய லூயிஸ் மாதிரியை விளக்குக. (12 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

05. a). "பொருளாதாரத் திட்டமிடல்" என்பதன் கருத்தினை விளக்குக. (04 புள்ளிகள்)

b). விரிவான திட்டமிடல் (Comprehensive), பகுதியளவான திட்டமிடல் (Partial) இரண்டையும் வேறுபடுத்திக் காட்டுக. (04 புள்ளிகள்)

c). "குறைவிருத்தி நாட்டுப் பொருளாதாரங்களில் காணப்படுகின்ற சந்தைத் தோல்வி நிலைமைகளே அரசாங்கத்தின் திட்டமிடல் நடவடிக்கைகளை அவசியப்படுத்தி நிற்கின்றன." ஆராய்க. (08 புள்ளிகள்)

d). குறைவிருத்தி நாடுகளில் திட்டங்கள் தோல்வியடைவதற்கு அங்குள்ள நிறுவனக் கட்டமைப்புக்களின் பலவீனங்களும் ஒரு காரணம் என்று கூறப்படுகின்றது. அத்தகைய பலவீனங்களை இனங்கண்டு விளக்குக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)